சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **155 / 2019**

பெயர்: வீரப்பன் வா.சா.1 **தேதி 29.01.2025**

1 மற்றும் 2வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கு சொத்துக்களுக்கு கிழக்கே ஆறுமுக கவுண்டர், மாணிக்க கவுண்டர் இடம் உள்ளது. அவர்கள் பூமியை அறிவழகன் என்பவருக்கு விற்று விட்டார்கள். வழக்கு சொத்துக்களுக்கு வடபுறமாக கிழமேல் பாதை உள்ளது. அறிவழகனுக்கு சொத்திற்கு மேற்கு புறத்தில் உள்ள சொத்துக்கள் பொதுவாக தான் உள்ளது. வழக்கு சொத்துக்களுக்கு தெற்கே பழனியப்பன், முத்தம்மாள் பெயரில் சொத்துக்கள் உள்ளது. மேற்படி வழக்கு சொத்துக்களுக்கு மேற்கே ஆறுமுகம், வேலுசாமி, ராமகிருஷ்ணன், தேவ கவுண்டர் ஆகியோர்களின் சொத்துக்கள் உள்ளது. மேற்படியார்களின் சொத்திற்கு கீழ் புறம் உள்ள சொத்தை மூன்றாவது பிரதிவாதி அனுபவித்து வருகிறாரா என்றால் இல்லை. பொதுவாக தான் அனுபவம் செய்யப்பட்டு வருகிறது. தாவா சொத்தை இரண்டு பாகமாக பிரிப்பது போன்று தென்வடலாக வரப்பு எதுவும் இல்லை. எனக்கும் முதல் பிரதிவாதிக்கும் எனது தாயார் முன்னிலையில் 2015ம் ஆண்டு பாக பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு பாகம் ஏற்பட்டதாகவும் அதில் மேற்புறம் உள்ள 6 ஏக்கர் 87 செண்ட் முதல் பிரதிவாதிக்கும் மீதம் உள்ள கீழ்புற பகுதி எனக்கும் ஒதுக்கப்பட்டது என்றாலும் அவ்வாறு ஒதுக்கப்பட்டதாக தென்வடலாக வரப்பு உள்ளதாகவும் மேற்புறம் உள்ள சொத்தை முதல் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அவ்வாறு மேற்குபுறம் உள்ள சொத்தை முதல் பிரதிவாதிக்கு ஒதுக்க அவர் இரண்டாவது பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இரண்டாவது பிரதிவாதி மேற்கு பகுதியில் உள்ள சொத்தை அனுபவித்து அந்த சொத்தை மூன்றாம் பிரதிவாதிக்கு விற்றுவிட்டார்கள் என்றால் அவ்வாறு விற்றுவிட்டார்கள் ஆனால் அது செல்லாது. நானும், எனது சகோதரிகள் மற்றும் எனது தாயார் உடன் சேர்ந்துக்கொண்டு முதல் பிரதிவாதிக்கு எதிராக செயல்பட்டுவருகிறோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கானது அனைத்து சொத்துக்களையும் சேர்ந்து தாக்கல் செய்யாத காரணத்தினாலும், எனது சகோதரிகள் மற்றும் தாயாரை தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினாலும் இவ்வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மூன்றாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கும் முதல் பிரதிவாதிக்கும் கடந்த 2015ம் ஆண்டு எனது தாயார் முன்னிலையில் வாய்மொழியாக பாகம் ஏற்பட்டுவிட்டதாகவும் அதன் அடிப்படையில் முதல்

பிரதிவாதிக்கு சொத்தின் மேற்கு பகுதி ஒதுக்கப்பட்டதாகவும் அதன் அடிப்படையில் முதல் பிரதிவாதியானவர் இரண்டாவது பிரதிவாதிக்கு தான செட்டில் மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றாலும் அதன் அடிப்படையில் இரண்டாவது பிரதிவாதியானவர் மூன்றாவது பிரதிவாதிக்கு மேற்படி சொத்தை கிரையம் செய்துகொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. மூன்றாவது பிரதிவாதியானவர் நல்லஎண்ண கிரையதாரர் என்றால் சரியல்ல. மேற்படி மூன்றாவது பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கூறியுள்ள சொத்தினை அவரே அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எங்களுக்கு பாத்தியப்பட்ட எல்லா சொத்துக்களையும் பொறுத்து பாக பிரிவினை கோரவில்லை என்பதால் வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மூன்றாவது பிரதிவாதியிடம் உள்ள சொத்தானது அவரின் தனிப்பட்ட சொத்து என்றாலும் அது கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.